**பஸ்பாகே கோராலே பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்பாகே கோராலே பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாடு பற்றிய கூற்று,முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் பஸ்பாகே கோராலே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம்பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்,முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும்சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் கட்டளை இடப்படாத மற்றும் பண்டங்கள் கிடைக்காது ரூபா 2,002,117 ஆன தொகையை வழங்குனருக்கு செலுத்த வேண்டிய செலவாக கணக்கீடு செய்த காரணத்தால், ஆண்டின் செலவுகள் மற்றும் கடன்கொடுனர் மீதி நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டன. | கட்டளையிட்ட பண்டங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் மூலதன செலவு மற்றும் கடன்கொடுனர் மீதி ரூபா 2,010,000 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | விலைமனு கோரியுள்ளதால், கடன்கொடுனராக குறிக்கப்பட்டுள்ளது. | மூலதன செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் அலுவலக கட்டிட நவீனமயமாக்க செய்த செலவு ரூபா 709,610 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு கணக்கினூடாக சரிசெய்வதென. | ஆண்டின் கட்டிட அபிவிருத்தி கிரயத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் கழுகல்ஹின்ன நீர் உத்தேச திட்டத்தின் பெறுமதி ரூபா 3,000,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு கணக்கினூடாக சரிசெய்வதென. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ரூபா 271,307 ஆன நானாவித வைப்பு மீதி அதற்குரிய அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது, திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | மேலும் பரீட்சித்து முன்னேற்றத்தை அறிவிக்க நடவடிக்கை எடுப்பதென. | மீதிகளை உறுதிப்படுத்த தேவையான ஆவணரீதியான சான்றுகளை பேணிக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,750,304 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 3,750,628 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி மற்றும் குத்தகை** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டியரூபா 980,293ஆன வீதவரிஅறவிடப்பட்டிருக்காததுடன்,அம் மீதியினுள் 05 ஆண்டுகளிலும் அதிக காலமாக அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இலும் விஞ்சிய 115 ஆதனங்களிற்குரியதாக அறவிட வேண்டியரூபா 407,312 தொகை உரிமையாளரை திட்டவட்டமாக இனங்காணாத 75 ஆதனங்களிற்கு உரியதாக அறவிட வேண்டிய ரூபா 66,807 தொகை உள்ளடங்கியிருந்தன. | 2022 மே 31 அளவில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதாக மற்றும் நிலுவை மீதி எதிர்காலத்தில் அறவிடப்படுவதென. | நிலுவை வீதவரித் தொகையை அறவிட வேண்டும். |

**(ஆ) நீர் வரி**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்மான 17 நீர் கருத்திட்டஙகளின் 180 வாடிக்கையாளர்களிடமருந்து 03 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 1,365,566 ஆன நீர் கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவையின் ஒரு பகுதியை அறவிட்டுள்ளதென. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். |

**(இ) முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவை முச்சக்கர வண்டி கட்டணம் ரூபா 481,900 அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக 38 முச்சக்கர வண்டிகளிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 320,000 உள்ளடங்கியிருந்தது. | கணிப்பீடொன்றை மேற்கொண்டு நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை முச்சக்கர வண்டி கட்டணத்தை அறவிட வேண்டும். |

**(ஈ) நில வாடகை**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான சில்வாஸ்லேன்ட்ஸ் காணியில் 18 காணித் துண்டுகளை குத்தகை வழங்கும் போது, 2018 புதிய மதிப்பீட்டின் மீது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன், அக் காணித் துண்டுகளிற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 107,845 நிலுவை நில வாடகை வருமானத்தை அறவிட்டிருக்கவில்லை. | தற்போது ஒரு பகுதியை அறவிட்டுள்ளதென. | புதிய மதிப்பீடின் மீது உடன்படிகை செய்து நிலுவை நில வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(உ) அறிவித்தல் பலகைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அதிகார பிரதேசத்தில் நிறுவியிருந்த 15 அறிவித்தல் பலகைக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 285,743 தொகையொன்றை அறவிட்டிருக்கவில்லை. | தற்போது ஒரு பகுதியை அறவிட்டுள்ளதென. | அறிவித்தல் பலகை வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2014 ஆண்டில் விளையாட்டு அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 468,780 ஏற்பாட்டை பயன்படுத்தி புரோஹில் தோட்டத்திற்கு சொந்தமான திபோரொன்வா பிரிவின் விளையாட்டு மைதானத்தை அமைக்கும் போது, காணியின் உரிமையை சரியாக உறுதி செய்து கொண்டிருக்காத காரணத்தால், சபையை பிரதிவாதியாக பெயரிட்டு கொழுப்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கிற்காக 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 818,500 ஆன வழக்கு கட்டணம் சபை நிதியத்திலிருந்து செலுத்தியிருந்ததுடன், வழக்கு நடவடிக்கைகளும் முடிவடைந்திருக்கவில்லை. | வழக்கின் முறைப்பாட்டாளரினால் சபை உள்ளடங்களாக சில தரப்பினரை பிரதிவாதிகளாக பெயரிட்டுள்ளதால், சபைக்கு இந்த வழக்கிற்காக சமுகமளிக்க நேர்ந்ததெனை. | காணிகளின் உரிமையை உறுதி செய்து கொண்டு அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். |

### (ஆ) சபைக்கு அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை

| | | |
|---|---|---|
| சபையில் 1998, 1999 மற்றும் 2000 ஆண்டுகளில், செயலாளராக சேவையாற்றிய அலுவலரினால் செய்த நிதி மோசடி ரூபா 762,322 மற்றும் அவரினால் பெறப்பட்ட ரூபா 32,227 ஊழியர் கடன் தொகையுடன் கூட்டுத் தொகை ரூபா 794,549 ஆன மொத்த தொகையை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(3) ஆரம்ப புலனாய்வு மேற்கொள்ளப்படுவதென. | குறித்த புலனாய்வை நடாத்தி மோசடி செய்துள்ள தொகையை அறவிட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபைக்கு சொந்மான 10 நீர் உத்தேச திட்டங்களின் நீர்மாணி பொருத்தியுள்ள 1,778 ஆரம்ப நீர் பாவணையாளர்களிற்கு இடையில் 424 நீர் பாவணையாளர்களிற்காக பொருத்தியிருந்த நீர்மாணிகள் செயலிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்ட போதும், அதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்காது, அப் பாவணையாளர்களிடமிருந்து மாதாந்த நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது. | செயலிழந்த மாணிகளை சுமுகநிலைக்கு மாற்றி மாணி வாசிப்பை குறித்துக் கொண்டு அதன் பிரகாரம் பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | சரியாக நீர்மாணிகளை பொருத்தி பயன்பாட்டின் பிரகாரம் நீர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |